இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 02-01-2025



# வான்புகழ் வள்ளுவர் - 2



முத்தமிழறிஞர் கலைஞரின் எண்ணத்துக்கு வண்ணம் சேர்த்தவர் சிற்பி கணபதி ஸ்தபதி அவர்கள்.

**“சிற்பச் சித்தரான கணபதி ஸ்தபதியார் அவர்கள் மூன்றாண்டு காலத்திற்கும் மேலாக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, நமது அய்யன் வள்ளுவனுக்கு காலத்தால் அழியாத நினைவுச் சின்னத்தை என் இதயம் இறக்கைகள் பெற்று பறந்து மகிழ்கிற அளவுக்கு, என் இரத்த நாளங்களில் இன்ப அருவி பாய்ந்து பரவுகிற அளவுக்கு, என் மேனியில் சல்லி நரம்புகளும் துள்ளிச் சதிராடும் அளவுக்கு, என் சுவாசக் கோசங்கள் ஆனந்தப் பெருமூச்சால் நிரம்பிப் பிதுங்குகின்ற அளவுக்கு வடித் தெடுத்து நிலைநாட்டி விட்டார்”** என்று பாராட்டினார் கலைஞர் அவர்கள்.

அத்தகைய கணபதி ஸ்தபதி அவர்கள் தான், குமரி முனையில் 133 அடியில் எழுந்த சிலையை, ‘உயிர் தரித்த உடல் போல, உருத்தரித்த வள்ளுவம்’ என்று சொன்னார்.

**“துண்டு கற்களாம் எழுத்துக்களைக் கோத்து, வள்ளுவர் உருவமாம் சொல்லாக்கி, வள்ளுவமாம் பொருளை வைத்து, தாளமானமாம் யாப்பைக் கொண்டு, கவினுறு உருவை (சிலையை)க் கட்டி, வள்ளுவர் பற்றிய சிறப்புச் செய்திகளை அணிகளாய்க் காட்சிப்படுத்தி இயற்றிய அழகுக் கவிதையே- உடல் தரித்த வள்ளுவமாய் திருவள்ளுவர் சிலையாய்க் காட்சி தருகிறது”** என்றார் அவர்.

தலைவர் கலைஞரின் சிற்பக் கலையாற்றல் குறித்து கணபதி ஸ்தபதி போற்றிப் பாராட்டி இருக்கிறார். கலைஞர் அரசியல்வாதி அல்ல, ‘பெரும் கலைஞராக’வே வாழ்ந்தார் என்கிறார் கணபதி ஸ்தபதி. ‘பூம்புகார் பெருந் தச்சன்’ என்ற விருதை கலைஞருக்கு மாமல்லபுரத்தில் வைத்து கணபதி ஸ்தபதியார் வழங்கினார்.

**“133 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலைபோல கருத்தாளமுள்ள- முற்றிலும் கல்லால் ஆன கட்டுமான நுட்பங்கள் செறிந்த சிலையாக - எங்கனும் எவரும் கண்டதில்லை. கேட்டதுமில்லை. நினைத்துப் பார்த்ததுமில்லை. வெற்றி கண்ட இப்பணி, சிற்பக் கலை மரபுக்கு மேலுமொரு அணியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. கலைகளையும், கலைகளின் சிறப்புகளையும் தொன்மையையும் உயர்வையும் பேசிடத்தக்கோர் நம் நாட்டில் ஏராளமாக இருப்பினும், கலை சார்ந்த பண்பாட்டுச் சின்னமாக பெரிய எடுப்புகளைக் கல் லால் செய்திடத் தக்கோர் இன்று குறைவே எனலாம். மேலும், இத்தகைய பணி யைச் செய்திட எவருக்கும் ஆசை இருக்கலாம். வாய்ப்புமிருக்கலாம். ஆனால் செய்திட வேண்டுமென்ற உறுதியும், அதற்குரிய துணிச்சலும் அதனால் ஏற்படும் வெற்றி மீது நம்பிக்கையும் கொண்டோர் அரிதினும் அரிது. அத்தகைய துணிச் சலைப் பெற்றவர் கலைஞர் தான்”** என்றார் கணபதி ஸ்தபதி.

கலைஞரே ஒரு சிற்பிதான். வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட வேண் டும் என்று திட்டமிட்டபோது கணபதி ஸ்தபதியிடம் அவரே கோடுச் சித்திரங்களை வரைந்து கொடுத்தார். திருவாரூர் தேர் போல ஒரு பகுதி அமைய வேண்டும் என்றார். கணபதி ஸ்தபதி இந்தப் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தபோதே ஸ்தபதி எஸ்.கே.ஆச்சார் அவர்களும் இதனுள் இணைந்தார். இவர் தான், குமரியில் விவேகானந்தர் மண்டபத்தை அமைத்தவர்.

**“பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக் கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளைத் தூண்டி இருக்கிறார்களே தவிர, யாரும் இப்படி ஒரு கல் தேரை பிரமாண்டமாக உருவாக்கும்படி கூறியது இல்லை”** என்று எஸ்.கே.ஆச்சார் சொல்லி இருக்கிறார்.

வள்ளுவர் கோட்டமும், வள்ளுவர் சிலையும், பூம்புகாரும், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையும் கலைஞரின் கலைச் சின்னங்களாக அமைந்து விட்டன. சங்க கால மன்னர் வளர்த்த கலைமரபின் நீட்சியாக அமைந் துள்ளன. அந்த வரிசையில் கீழடி ஆய்வகம், திருவாரூர் கலைஞர் கோட்டம், சென்னை கலைஞர் உலகம், மதுரை கலைஞர் நூலகம் போன்ற வரலாற்றுச் சின்னங்களை அமைத்து வருகிறார் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

**திருக்குறளை ஞானத் திருவிளக்கு என்றார் வீரமாமுனிவர். வடமொழித் தொடர்பில்லாதது என்றார் கால்டுவெல். மற்ற எல்லா நூல்களையும் விடச் சிறந்தது என்றார் ஜி.யு.போப். ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்பதுதான் இங்கர்சாலுக்குப் பிடித்த குறள். டால்ஸ்டாய் தனது கடிதங்களில் குறளை மேற்கோள் காட்டினார். தன்னிடம் இருந்த குறள் ஓலைகளை பாதுகாப்பாக வைத்திருந்தார் எல்லீஸ். வடலூரில் வகுப்பு நடத்தினார் அருட்திரு வள்ளலார். ‘நான் தமிழ் படிக்க விரும்பக் காரணம், திருக்குறளை மூலத்தில் படிக்க வேண்டும் என்பதற்காகவே’ என்றார் அண்ணல் காந்தி. ‘வள்ளுவரை உலகுக் குத் தந்த தமிழ்நாடு’ என்றார் மகாகவி பாரதி. இவை அனைத்துக்கும் மேலாக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் சொன்னார்...**

**“திருக்குறளின் பெருமை அறியாதவரை நான் மதிப்பதுமில்லை, நேசிப்பது மில்லை” என்றார் வ.உ.சி. இத்தகைய பெருமை எந்த நூலுக்கும் இல்லை. எந்த ஆளுக்கும் இல்லை.**

உலகப் புகழை அடைந்துவிட்டார் வள்ளுவர் என்பதில் இருந்தே அவர் யாத்த குறளின் பெருமையை உணரலாம். வள்ளுவருக்கு வானுயர சிலை அமைத்ததன் மூலமாக கலைஞரின் கலைத் திறமையை அறிய லாம். வள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவைச் சிறப்புறக் கொண்டாடத் திட்டமிட்டதன் மூலமாக குறள் வழிச் சமுதாயம் அமைக்க விரும்பும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெருங்கனவை அறியலாம்.

**பேரறிவுச் சிலை என்று பேர் பெற்றுள்ளது வள்ளுவனார் சிலை.**

**பெருங்கனவின் தொடக்கமாக அமைந்துள்ளது வெள்ளிவிழா.**

**வாழ்க வள்ளுவம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.12.2024 அன்று கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகையாக தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் விழாவில், பெரும்புலவர் மு.படிக்கராமு அவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை எம்.எம்.சாமி ஏற்பாட்டில்! இரா.லட்சுமணன் - தா.வ.மு.கஜேந்திரன் முன்னிலையில்!

## சலவை தொ.மு.ச சார்பாக திண்ணைப் பிரச்சாரம்!

### என்.எம்.கதிரேசன் - ஜெ.பிரேம்ஆனந்த்- வெ.சு.சத்தியநாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஜன.02–

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தொ.மு.ச பேரவை பொதுச் செயலா ளர் மு.சண்முகம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆகி யோரின் அறிவுறுத்தலின்படி

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்டம் பூண்டிதங்கம்மாள் தெருவில் அமைந்துள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்பில் சலவை தொழிலாளர் தொ.மு.ச மாநில தலைவரும் மாவட்ட பிரதிநிதியுமான நெல்லை எம்.எம். சாமி ஏற்பாட்டில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், 39(அ) வட்ட செயலாளர் தா.வ.மு. கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் திண்ணைப் பிரச்சாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநா ராயணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோம சுந்தரமூர்த்தி, முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் எஸ்.பி. எஸ்.புத்தன், பகுதி துணை செயலா ளர் ஆர்.டி.ராஜா, 39வது வட்ட செய லாளர் என்.எம்.கதிரேசன், 43(அ) வட்ட பொறுப்பாளர் ஜெ.பிரேம்ஆனந்த, 39வது வட்ட மாமன்ற உறுப்பினர் தேவிகதிரேசன், 39(அ) வட்ட நிர்வா கிகள் கே.அடைக்கலம், எஸ்.சுரேஷ் குமார், எம்.மோகன், ஜி.சசிகுமார், பி.பாஸ்கர், பி.பால்பாண்டியன், சந்த னகுமார், கண்ணன், எம்.ஈஸ்வரன், பிரசாந்த், சரத், எஸ்கார்த்திக், மற்றும் சலவை தொ.மு.ச தோழர்கள், மகளிர் கள், கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு கழக அரசின் சாத னைகளை பொதுமக்களிடையே விளக்கிக் கூறினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.12.2024) முகாம் அலுவல கத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### மாணவிகளிடம் அச்ச உணர்வை ஏற்படுத்த - உள் நோக்கத்துடன்

# அருவருப்பு அரசியல் செய்யும்- ‘சேடிஸ்ட்’ மனநிலையை பழனிசாமி நிறுத்த வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம்!

**சென்னை, ஜன.2-**

**அரசியல் இருப்பைக் காட்ட தமிழ்நாட்டு மாணவியரிடம் அச்ச உணர்வை ஏற்படுத்தும் உள்நோக் கத்துடன் எடப்பாடி பழனிசாமி செயல்படுகிறார் என்றும் அருவ ருப்பு அரசியல் செய்கிறார் சேடிஸ்ட் மனநிலையை பழனிசாமி நிறுத்த வேண்டும் என்றும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

ஒரு பொய்யை திரும்பத் திரும் பச் சொன்னால் உண்மையாகி விடும் என கோயபல்ஸ் பாணி பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார் எதிர்கட்சித்தலைவர் பழனிசாமி.

திராவிட மாடல் ஆட்சியில் துணிச்சலாக பெண்கள் புகார் அளிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் புகாரளித்தவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் விதமாக தினமும் அவரது நடவ டிக்கைகள் மாறி வருகின்றன.

தினமும் அந்த நிகழ்வை நினைவூட்டும் வகையில் ஊடகங் களில் செய்தியாக்குவதை ஒரு அஜெண்டாவாக வைத்திருக்கும் பழனிசாமியின் நடவடிக்கைகள் பிறரைத் துன்புறுத்தி மகிழ்ச்சி காணும் அவரது சேடிஸ்ட் மனநி லையை காட்டுகிறது. இனி புகாரளித்தால் நம்மை வைத்து அரசியல் செய்துவிடுவார்கள் என்ற பயத்தை பெண்களிடம் உருவாக்கவே பழனிசாமி திட்டமி டுகிறார் எனத் தோன்றுகிறது.

**வதந்தி பரப்பும் பழனிசாமி!**

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை விவகா ரத்தில் தமிழ்நாடு அரசு வெளிப்ப டையான நேர்மையான நடவடிக் கைகள் எடுத்துக் கொண்டி ருப்பதை தமிழ்நாட்டு மக்கள் நன் கறிவர். ஆனால் ஊடகத்தில் வந்த செய்தி ஊடகத்தில் வந்த செய்தி என சொல்லி வதந்திகளை மட்டும் தானே பழனிசாமி பரப்பி வந்துள் ளார்?

அரசிடம் நேர்மையும் உண் மையும் இருக்கும் காரணத்தி னால்தான் அதிமுக முன்வைக்கும் விமர்சனங்களுக்கு உடனு க்கு டன் எங்கள் அமைச்சர்கள் எதிர் வினை ஆற்றுகிறார்கள். எடப்பாடி பழனிசாமி சொல்லும் அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் வெளிப்ப டையாக பதில் அளிக்கப்பட்டி ருக்கிறது.

காவல்துறைதான் FIR யை வெளியிட்டுள்ளது என்ற அபாண்ட பொய்யை பாஜகவுடன் சேர்ந்து பரப்பினார். சென்னை மாநகர காவல் ஆணையர் FIR யை காவல்துறை வெளியிடவில்லை ஒன்றிய அரசு IPC யிலிருந்து BNS க்கு மாற்றம் செய்ததால் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சனையால் FIR வெளியானது என விளக்கம் அளித்தார். ஆனால் அதையும் ஏற் காமல் தொடர்ந்து பொய் பரப்பி வந்தார் பழனிசாமி. தற்போது FIR கசிந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு இணையதளத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறே கார ணம் என்று ஒன்றிய அரசின் தேசிய தகவலியல் மையமே (NIC National Informatics Centre) அதி காரப்பூர்வமாக தெரிவித்திருக்கி றது. அற்பத்தனமாக பொய் பேசிய பழனிசாமி, நியாயமாக மக்கள் முன் மன்னிப்பு கேட்டிருக்க வேண் டும் ஆனால் கேட்டாரா இல்லை அடுத்த பொய்க்கு தாவிவிட்டார்.

**அரசு உத்தரவாதம்!**

குற்றவாளி ஞானசேகரன், ‘சார்’ என்று ஃபோனில் யாரிடம் பேசினான் என்று கேட்கிறார். அவன் அந்த மாணவியை மிரட் டுவதற்காகவே அப்படி போனில் பேசுவதாக நடித்திருக்கிறான் என காவல்துறை ஆணையர் விளக்கி யிருக்கிறார். விசாரணையின் முடி வில் குற்றவாளிகள் யாராக இருந் தாலும் தண்டிக்கப்படுவர் என அரசு உத்தரவாதம் அளித்திருக்கிறது.

இப்படி உண்மைகள் வெளிப் படையாக வெளி வந்து கொண்டி ருக்கின்றன. உண்மைகளை தாங்கிக் கொள்ள முடியாமல் அற்ப அரசியலில் ஈடுபடும் பழனிசாமி ஏதையோ மறைப்பதாக உளறி வருகிறார். இந்த வதந்தி அரசியல் எல்லாம் ஒரு நாளும் மக்களிடம் எடுபடாது.



சரித்திரப் பதிவேடு குற்ற வாளியை கண்காணிக்காதது ஏன் என பொங்குகிறார் பழனிசாமி! கடந்த 2014 முதல் 2019 வரை யில் தான் ஞானசேகரன் குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளான். அப்போது யார் ஆட்சி செய்தது என்பதை பழனிசாமி மறந்துவிட் டாரா? பல குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிக்கு தண்டனை கிடைக்க பழனிசாமி ஆட்சி என்ன முயற்சி எடுத்தது? பாலியல் குற் றம் செய்தவனை வெறும் திருட்டு வழக்கு மட்டும் போட்டு குற்ற வாளியை தப்பிக்கவிட்ட மோச மான ஆட்சி தான் பழனிசாமியின் ஆட்சி. அப்போதே கடுமையாக தண்டித்திருந்தால் இன்று இது போன்ற நிகழ்வே நடந்திருக்காது.

**கள்ளக் கூட்டாளி!**

தனது கள்ளக்கூட்டாளி பாஜக வுடன் சேர்ந்து அரசியல் நாடகம் நடத்தி வருகிறார் பழனிசாமி. மாணவிகளின் கல்விக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவ டிக்கைகளை மேற்கொண்டு வரும் சூழலில் மாணவிகளிடமும் பெற்றோரிடமும் அச்ச உணர்வை ஏற்படுத்தும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியின் உள்நோக்கம் என் னவென்று மக்கள் புரிந்து கொள் வார்கள்.

கூசாமல் பொய் சொல்வதில் பச்சை பொய் பழனிசாமிக்கு நிகர் யாரும் இல்லை என்கிற அளவில் தான் அவர் கூறிய நிகழ்வுகள் இருக்கின்றன. பொள்ளாச்சி வழக் கினை சிபிஐ க்கு உடனடியாக மாற்றினேன் என பெருமையா கக் கூறுகிறார். அ.தி.மு.க. வின் முக்கிய புள்ளிகள் மறைமுகமகா வும், அ.தி.மு.க.வின் பொள்ளாச்சி நகர இளைஞரணி செயலாளர் அருளானந்தம் முக்கியக் குற்றவா ளியாக இருந்ததாலும், எடப்பாடி பழனிசாமி மீது துளியும் நம் பிக்கை இன்றி பொதுமக்கள், மாணவர்கள், எதிர்கட்சிகள் நடத் திய கடும் போராட்டத்தால் CBI யிடம் வழக்கு ஒப்படைக்கப்பட் டது. ஆனாலும் ஒன்றிய பாஜக வோடு அதிமுகவின் கள்ளக்கூட் டணி தொடர்வதால் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் இன்னும் விசாரணை முடியாம லேயே இருக்கிறது.

**பாலியல் குற்றவாளிகளின் புகலிடம்!**

பொள்ளாச்சி முதல் அண்மை யில் இராமேசுவரத்தில் குளியல றையில் கேமரா வைத்து கைதா னவர்கள் வரை பாலியல் குற்ற வாளிகளின் புகலிடமாக அ.தி. மு.க.வே இருந்து வருகிறது என்பது கண்கூடு. தனது அரசியல் இருப்பை காட்டிக்கொள்ள அண்ணா பல்க லைக்கழக வழக்கை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவருக்கு நாளும் உள வியல் துன்புறு த்தலை ஏற்படுத் தும் கேவலமான, இழிவான, அருவருப்பு அரசியலை பழனி சாமி நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்கள் என்பார்கள் ஆனால் பழ னிசாமியின் புளுகு ஒரு நாள் கூட நீடிப்பதில்லை. அந்த விரக்தியில் திரும்பத் திரும்ப அதே பொய் களை பேசி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நினைக்கிறார் பழனிசாமி.

பெண்கள் மீதான வன்மு றையை நிகழ்த்துபவர்கள் எவ ரும் முதலமைச்சரின் ஆட்சியில் ஒரு நாளும் தப்பிக்க முடியாது. கடந்த 2022-ஆம் ஆண்டு பரங் கிமலை ரயில் நிலையத்தில், ஒரு தலை காதலை ஏற்க மறுத்த சத்தி யப்பிரியா என்ற கல்லூரி மாணவியை மின்சார ரயிலில் தள்ளிவிட்டு கொலை செய்த கொலையாளி சதீஸ்க்கு இரண்டே வருடத்தில் முழு விசாரணையும் முடிந்து மரண தண்டனை கிடைக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டுள்ளது திராவிட மாடல் ஆட்சியின் தமிழ்நாடு காவல் துறை மற்றும் நீதித்துறை. சத்திய பிரியா கொலை வழக்கில் குற்ற வாளிக்கு எப்படி விரைவாக அதிகப்பட்ச தண்டனையை இந்த அரசு பெற்றுத் தந்ததோ அதே போல இந்த வழக்கில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து விரை வான நீதியை இந்த அரசு பெற்று தரும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.



ஈரோடு தாண்டாம் பாளையம் விநாயகா டெக்ஸ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புதிய கட்டடத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், வீரமணி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குனர் சரவணன், கொடுமுடி ஒன்றிய செயலாளர் ப.நட்ராஜ், கு.இளஞ்செழியன், கொல்லன் கோவில் பேரூராட்சி தலைவர் பூ.சந்திரசேகர், மேலாளர் இளங்கோவன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.